**Prof. Dr. K Kasthurirangaian**
Chairman

603 'C' Block, Pioneer Complex, 1075, Avinashi Road
Coimbatore - 641 108 INDIA
Phone : 91-422-6585908, 6586908
Fax : 91-422-2248408
E-mail : chairmaniwpa@windpro.org

INDIAN WIND POWER ASSOCIATION
IWPA
helping mankind with energy from nature

பெறுநர் நாள் : 07.06.2016

**உயர்திரு.பி தங்கமணி அவர்கள்,**
**மாண்புமிகு அமைச்சர்,**
**மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை,**
**புனித ஜார்ஜ் கோட்டை,**
**சென்னை – 600 009.**

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு,

**பொருள் :** தமிழகத்தில் உள்ள காற்றாலைகளை உற்பத்தி நிறுத்தம் செய்யவிடாமல் அதன் மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தை முழுமையாக மின்வாரியம் எடுத்துக் கொள்ள உத்தரவிடுவது சம்மந்தமாக

**பார்வை:** 01.06.2016 அன்று நேரிடையான முறையீடு.

வணக்கம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் சங்கத்தின் வேண்டுதலை ஏற்று 01.06.2016 அன்று தங்களது பொன்னான நேரத்தை எங்களது பிரதிநிதிகளுக்காக ஒதுக்கி எங்களுடைய பல்வேறு கோரிக்கைகளையும் மிகுந்த கவனத்துடனும் மெத்த பரிவுடனும் கேட்டு எங்களது மனுவினைப் பெற்றுக் கொண்டு எங்களது கோரிக்கைகளை தகுந்த முறையில் மேலெடுத்துச் செல்ல வழங்கிய உரிய ஆலோசனைகளுக்கு எங்களது மனமார்ந்த நன்றியினை எங்கள் சங்கத்தின் சார்பாக மெத்த பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழகத்தில் உள்ள காற்றாலைகள் அனைத்தும் தங்கள் தங்கள் நிறுவுதிறனுக்கு ஏற்ப 100 சதவிகித மின்சாரத்தை இந்த ஆண்டு உற்பத்தி செய்திட ஏதுவான வகையில், இதுநாள் வரையில் கடந்த 8 ஆண்டுகளாக இருந்து வந்த மின்சாரச் சட்டம் 2003 பிரிவு 11(1) கீழான தடையினை உடனடியாகத் தளர்வு செய்து, காற்றாலை மின்சாரத்திற்கு உரிய இடம் கொடுத்து அதனை முழுமையாக மின்வாரியம் ஏற்றுக் கொள்ளத் தகுந்த வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுத்தமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியினை இதன் மூலம் காணிக்கையாக்குகின்றோம்.

IWPA
helping mankind with energy from nature

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காற்றாலைகளில் உற்பத்தியாகும் மின்சாரத்தை 100 சதவிகிதம் மின்வாரியம் எடுத்துக்கொள்ளவும், அதன் அடிப்படையில் வழங்கிய தகுந்த ஆலோசனைகளை மேலெடுத்துச் செல்லவும் எங்களது சங்க உறுப்பினர்களிடம் 05.06.2016 மற்றும் 07.06.2016 அன்று விரிவாகக் கலந்து ஆலோசித்ததில், எங்களது சங்க உறுப்பினர்கள் அனைவரும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மின்வாரியத் தலைவர் டாக்டர். சாய்குமார் அவர்களும் வழங்கிய ஆலோசனையை முழுமையாக ஏற்றுக் கொண்டு காற்றுக் காலத்தில் காற்றின் போக்கில் முன்கூட்டியே வழங்கப்படும் உறுதியான முன்கணிப்புகளுக்கு மாறாக திடீரென்று காற்றின் வேகம் குறைந்து அதனால் காற்றாலைகளில் மூலம் மின் உற்பத்தி செய்ய இயலாத நிலை ஏற்பட்டால் பொதுநலன் கருதி தமிழ்நாடு மின்வாரியம் வெளியில் இருந்து தேவைப்படும் அளவிற்கு சந்தை விலையில் மின்சாரம் வாங்கிடலாம் என்றும், அதனால் மின்வாரியத்திற்கு ஏற்படும் கூடுதல் செலவினத்தை நிறுவப்பட்டுள்ள 7600 மொவாட் காற்றாலைகளும் தங்கள் தங்கள் திறனுக்கு ஏற்ப மேற்படி வகையில் ஏற்படும் கூடுதல் செலவினத்தை பகிர்ந்து கொண்டு அதனை மின்வாரியத்திற்கு செலுத்தத் தயாராக உள்ளது என்றும் மேற்கண்ட நடைமுறையினை சோதனை முயற்சியாக ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் முதல் கட்டமாக அமல் படுத்தி அம்முயற்சி செயல்படும் தன்மையின் அடிப்படையில் மறு ஆய்வு செய்து இதர மாதங்களக்கும் அதேப் போன்ற நிலையினைத் நீட்டிக்கலாம் என்று வழங்கிய ஆலோசனைக்கு எங்களது பணிவான ஒப்புதலை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்தியன் விண்ட் பவர் அசோசியேசன் தரப்பில் இதன் மூலம் உறுதிபடத் தெரிவிக்கின்றோம்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுநலன் கருதியும் 100 சதவிகிதம் காற்றாலை மின்சாரத்தை மின்வாரியம் எடுத்துக்கொள்ள நடைமுயைக்கு ஏற்றபடி வழங்கிய ஆலோசனைகளுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியினை மீண்டும் மெத்த தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றியுடன்,

**தங்கள் உண்மையுள்ள,**

**டாக்டர் கே.கஸ்தூரிரங்கையன்**
**இந்தியன் விண்ட் பவர் அசோசியேசன்**

**நகல் :** உயர்திரு எம்.சாய்குமார்.இ.அ.ப. அவர்கள்,
தலைவர்,தமிழ்நாடு மின்வாரியம்,
144 அண்ணாசாலை,சென்னை – 600 002.

**Indian Wind Power Association**
Door No. E, 6th Floor, Tower -1, Shakti Towers, No. 766, Anna Salai, Chennai 600 002
Ph : 044 4550 4036 | Fax : 044 4550 4281 | E-mail : iwpacno@windpro.org / secretary.general@windpro.org | Website : www.windpro.org